DATE:28.05.2024.
P.W.1 NADAKUMAR S/o. NAGARAJAN

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:**

நான் டிப்ளோமோ படித்துள்ளேன். எதிரியை எனக்கு 20 வருடங்களுக்கு மேலாக தெரியும். எதிரி எங்கள் தோட்டத்தில் வந்து காய்கறி, பழங்களை வாங்கி சென்றுள்ளார். 02.09.2020 தேதியிட்ட கடனுறுதி பத்திரம் மூலம் நான் எதிரிக்கு கடன் வழங்கியிருப்பதாக எனது புகாரில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அச்சமயத்தில் கொரனா தொற்று உச்சக்கட்டத்தில் இருந்தது என்றால் சரிதான். அச்சமயம் அரசு ஊரடங்கு உத்தரவு பிறப்பித்திருந்ததால் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. வருவாய் துறையினரிடமும், காவல் துறையினரிடமும் அனுமதி பெற்றுக்கொண்டு தான் வெளியே சென்று வரவேண்டி இருந்தது என்றால் சரியல்ல. எனவே நான் சொல்வது போல் எதிரி வந்து கடன் பெற்று கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரி கடனுறுதி பத்திரம் எழுதிக் கொடுத்திருந்தால் நான் அதை நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருப்பேன் என்றாலும் அவ்வாறு பத்திரம எதுவும் எழுதி தரவில்லையென்பதால் தான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றாலும் சரியல்ல. காசோலையை பெற்றுக்கொண்டு கடன் பத்திரத்தை திருப்பி கொடுத்து விட்டேன். காசோலையை பெற்றுக் கொண்டு பத்திரத்தை திருப்பி கொடுத்ததாக சட்ட அறிவிப்பிலும், எனது புகாரிலும் குறிப்பிட்டு சொல்லவில்லையென்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பத்திரத்தை திருப்பி கொடுத்திருந்தால் சட்ட அறிவிப்பிலும், புகாரிலும் அதனை குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. எந்த சாட்சிகளின் முன்னிலையில் பத்திரத்தை திருப்பி கொடுத்தேன் என்பதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 02.09.2020 முதல் 10.10.2022 வரையான 26 மாத காலத்திற்குண்டான வட்டியை சேர்த்து தான் ரூபாய் 4,20,000/− எதிரி தர வேண்டுமென குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வட்டி பணத்தையும் சேர்த்து தான் ரூபாய் 4,20,000/− க்கு காசோலை பெற்றேன் என்றால் சரிதான். வட்டியுடன் சேர்த்து தர வேண்டிய பாக்கி ரூபாய் 4,20,000/− த்திற்கும் மேல் வந்தது பஞ்சாயத்து பேசி ரூபாய் 4,20,000/− க்கு காசோலை பெற்றேன். ஒரு மாத்திற்கு ரூபாய் 1,00,000/− ற்கு 24 சதவீதம் வீதம் மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் 2,000/− வட்டியாக கணக்கிடப்பட்டுள்ளது. எனவே 26 மாத காலத்திற்கு ரூபாய் 4,56,000/− தொகைக்கு குறைத்து கொண்டு ரூபாய் 4,20,000/− ற்கு காசோலை பெற்றதாக நான் புகாரில் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். எனவே நான் சொல்வது போல் கடன் பத்திரம் பெற்றுக்கொண்டு கடன் அளிக்கவில்லையென்பது தெரிகிறது என்றால் சரியல்ல. நான் என்ன தொழில் செய்கிறேன் என்று புகாரில் தெரிவிக்கவில்லையென்றால் நான் விவசாயம் செய்கிறேன். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. கொரனா காலத்தில் கடன் அளிக்கும் அளவிற்கு எதன் மூலம் வருமானம் வந்தது என்பதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவசியமில்லை. மேற்படி விவரத்தை நான் சட்ட அறிவிப்பிலும், புகார் மனுவிலும் தெரிவிக்கவில்லை. நான் சட்ட அறிவிப்பு அனுப்பிய பிறகு எதிரியை தொடர்பு கொள்ளவில்லை. எதிரி எந்த காலத்திலும் எனது நிலத்திற்கு கூலி

வேலைக்கு வந்தது இல்லை. எதிரி எனது நிலத்தில் பலமுறை ஏர் ஓட்ட வந்துள்ளார் என்றாலும் அதனை மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவ்வாறு ஏர் ஓட்ட எனது நிலத்திற்கு வரும்போது அவரது வங்கி கணக்கு புத்தகம் மற்றும் காசோலைகளை வரப்பில் வைத்தபோது காணாமல் போன காசோலைகளை பயன்படுத்தி இந்த வழக்கை நான் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் சட்ட அறிவிப்பு அனுப்பியது குறித்து எதிரி கேட்டபோது நான் தான் பதில் எதுவும் கொடுக்க வேண்டாமென்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. எதிரிக்கு பணம் பெற வேண்டிய அவசியம் ஏதும் இல்லையென்பதால் அவர் என்னிடம் கடன் பெறவில்லையென்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து காசோலையை திருடி பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல.